பக்கங்கள் - 13

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

மின்னிதழ்

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 08 சனிக்கிழமை (22.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 154

## கொரோனா +3,547

(கொழும்பு)

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 3,547 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள நாளாந்த புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் 02

# பயணத்தடையின்போது மக்களின் பொருளாதாரம் பாதிக்காதிருக்க நடவடிக்கை

## அமைச்சர்கள், அதிகாரிகளுடன் ஜனாதிபதி கோட்டா ஆராய்வு

(கொழும்பு)

கோவிட் தொற்று நோயை கட்டுப்படுத்துவதற்காக பயணக் கட்டுப்பாட்டை விதிக்கும்போது மக்களுக்கும் பொருளாதாரத் திற்கும் பாதிப்பு ஏற்படாதிருக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பல தீர் 02



## முழுநேர பயணத்தடைக் காலங்களில்

# கண்காணிப்பு மற்றும் கைது நடவடிக்கை தீவிரமாக இருக்கும்

## பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண எச்சரிக்கை



(கொழும்பு)

**நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள முழுநேர பயணத்தடைக் காலங்களில் கண்காணிப்பு மற்றும் கைது நடவடிக்கைகள் மிகவும் தீவிரமாக இருக்கும். எனவே பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது.

நாடளாவிய ரீதியில் இன்று (நேற்று) இரவு 11 மணிமுதல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணிவரையில் முழுநேர போக்குவரத்து கட்டுப்பாடு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணிக்கு 02

## வவுனியாவில் கோர விபத்து முதியவர் பலி

(வவுனியா)

வவுனியா மணிக்கூட்டுக்கோபுர சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற கோர விபத்தில் படுகாயமடைந்திருந்த முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 02

Newspapers BTamil.com

## சங்கானையில் மருத்துவத்துறை சார்ந்த 6 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று அடையாளம் காணப்பட்டவர்களில் ஆறு பேர் மருத்துவத் துறை சார்ந்தவர் 02

## நாட்டில் ஒரே நாளில் 38 கொரோனா மரணம்

(கொழும்பு)

நாட்டில் ஒரே நாளில் அதிகூடிய கொரோனா மரணங்கள் நேற்றுமுன்தினம் உறுதி செய்யப்பட்டன.

38 கொரோனா மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களில் 24 பேர் 71 வயதிற்கும் மேற்பட்டோர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கூறியுள்ளார்.

61 முதல் 70 வயதிற்குட்பட்ட 10 பேரும் 02

## வடமராட்சியில் மணல் கடத்திய ஹன்டர் மீது துப்பாக்கிச் சூடு



### மூவர் தப்பியோட்டம் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு குடத்தனையில் மணல் கடத்தலில் 02

## காக்கைதீவு சந்தையில் எழுமாற்று பரிசோதனை 4 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட காக்கைதீவு மீன் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றான பிசிஆர் பரிசோதனையில் நால்வருக்கு கொரோனாத் தொற்று 02

## யாழில் 41 பேர் உட்பட வட மாகாணத்தில் 80 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 41 பேர் உட்பட வடக்கில் 80 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் 1,232 பேருக்கு நடத்தப் 02

## கடலுக்கு செல்ல வேண்டாம் வளிமண்டலவியல் திணைக்களம்

(கொழும்பு)

நாட்டில் தொடர்ச் 02

## நாட்டில் ஒரே...

51 தொடக்கம் 60 வயதிற்கு இடைப்பட்ட ஒருவரும் 41 தொடக்கம் 50 வயதிற்கு இடைப்பட்ட ஒருவரும் 31 தொடக்கம் 40 வயதிற்கு இடைப்பட்ட இருவரும் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்த 38 பேரில் 19 பேர் பெண்களாவர்.

இதற்கமைய, நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 1,089 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## வடமராட்சியில்...

ஈடுபட்ட கும்பல் பயணித்த ஹன்டர் வாகனத்துக்கு சிறப்பு அதிரடிப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் வாகனம் விபத்துக்குள்ளாகியது.

அதில் பயணித்த மூவர் தப்பித்த நிலையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது. சம்பவத்தில் துன்னாலையைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்டவராவார். தப்பித்தவர்களை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

அத்துடன், சட்டத்துக்குப் புறம்பாக மணல் அகழ்வில் ஈடுபட்டு அதனைக் கடத்த பயன்படுத்தப்பட்ட ஹன்டர் வாகனம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. மணலை ஏற்றியவாறு வந்த ஹன்டர் வாகனத்தை சிறப்பு அதிரடிப் படையினர் மறித்துள்ளனர்.

எனினும் கட்டளையை மீறி பயணித்த ஹன்டரின் சில்லுக்கு சிறப்பு அதிரடிப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

அதனால் ரயர் வெடித்து கட்டுப்பாட்டையிழந்த ஹன்டர் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. அதனையடுத்து அதில் பயணித்தவர்கள் தப்பி ஓடியுள்ளனர். ஒருவர் மட்டும் முற்கம்பிக்குள் சிக்குண்ட நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-3,33,60)

## வட மாகாணத்...

பட்ட பிசிஆர் பரிசோதனையில் வடமாகாணத்தில் 80 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. இதன்படி யாழ். மாவட்டத்தில் 41 பேருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 25 பேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் 6 பேருக்கும் மன்னார் மாவட்டத்தில் 2 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் 2 பேருக்கும் தருமபுரம் வைத்தியசாலையில் 2 பேருக்கும் பளை வைத்தியசாலையில் ஒருவருக்கும் பூநகரி வைத்தியசாலையில் ஒருவருக்கும் கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 10 பேருக்கும் கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 6 பேருக்கும் பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 4 பேருக்கும் பருத்தித்துறை பிரதேச வைத்தியசாலையில் 7 பேருக்கும் தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஒருவருக்கும் சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒருவருக்கும் மானிப்பாய் வைத்தியசாலையில் 3 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டதுடன்,

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 10 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 4 பேருக்கும் யாழ்.சிறைச்சாலையில் ஒருவருக்கும் தொற்று உறுதியாகியுள்ளது. (ம-3,18,33)

## வவுனியாவில்...

வவுனியா பூம்புகார் பகுதியில் இருந்து கண்டிவீதி வழியாக பயணித்த டிப்பர் வாகனம் மணிக்குக்கூட்டுகோபுர சந்தியில் சென்றுகொண்டிருந்தபோது குறித்த சந்தியால் திரும்ப முற்பட்ட மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த முதியவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் தேக்கவத்தை பகுதியை சேர்ந்த இராஜேந்திரம் (வயது-65) என்ற முதியவரே உயிரிழந்தவராவார்.

விபத்து தொடர்பாக வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,299)

## மருத்துவத்துறை...

கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்கள் சங்கானை ஆயுர்வேத வைத்தியசாலையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் 3 பேர், தனியார் மருந்தகத்தில் பணியாற்றிய 3 பேர் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சங்கானையில் அடையாளம் காணப்பட்டவர்களில் ஒருவர் வீதி புனரமைப்புப் பணியாளர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## கடலுக்கு...

சியாக மழையுடனான காலநிலை நிலவுவதால் மீனவர்களைச் கடலுக்கு செல்ல வேண்டாம் என வளிமண்டலவியல் திணைக்களம் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு அந்தமான் மற்றும் வங்காள விரிகுடாவின் வடகிழக்கு கடற்பகுதிகளில் தாழமுக்க நிலை காணப்படும்.

இதனால் மறு அறிவித்தல்வரை அந்த பகுதிகளில் மீன்பிடி மற்றும் கடற்றொழில் சார் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என அத்திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அதேவேளை நாட்டின் பல பகுதிகளில் காற்று வேகமாக வீசக்கூடும் என குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## காக்கைதீவு...

நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையிலேயே குறித்த விடயம் தெரியவந்துள்ளது. (ம-3)

## பயணத்தடையின்...

மானங்களை மேற்கொண்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கோவிட் ஒழிப்பு ஜனாதிபதி செயலணியுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி விளக்கினார்.

பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் காலப்பகுதியில் தொழிற்சாலைகளை தொடர்ச்சியாக நடத்திச் செல்லுதல், மருந்தகங்களை திறந்து வைத்தல், பேக்கரி உற்பத்திகளை தொடர்ச்சியாக மேற் கொள்ளுதல் மற்றும் விநியோகிப்பதற்கு முறைமையொன்றை வகுத்தல், கப்பல் பொருட்களை விநியோகிக்கும் நிறுவனங்களை திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், பிரதேச ரீதியாக நடமாடும் சேவைகளை மேற்கொண்டு எவ்வித தட்டுப்பாடும் இன்றி அத்தியாவசிய உணவுப் பொருட்களை மக்களுக்கு விநியோகிப்பதற்கும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அத்தியாவசிய பொருட்களை விநியோகிப்பதற்காக பிரதேச செயலாளர்களின் ஊடாக தேவையான அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கும் வீதித் தடை நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்கு பொலிஸ் மற்றும் இராணுவத்தினரை பயன்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார மத்திய நிலையங்கள் திறக்கப்படும் நாளுக்கு முன்னைய தினம் பொருட்களை கொண்டு செல்வதற்காக அனுமதியளித்தல், விவசாய நடவடிக்கைகள், அனைத்து நகரங்களிலும் குப்பைகளை அகற்றுதல் உள்ளிட்ட நாளாந்த சுத்திகரிப்பு நடவடிக்கைகள், வீதி அபிவிருத்தி மற்றும் ஏனைய நிர்மாணப் பணிகளை முன்னெடுத்தல் போன்றவற்றுக்கு இந்த பயணக் கட்டுப்பாட்டை தடையாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பிசிஆர். பரிசோதனை மேற்கொள்ளும் அரச அல்லது தனியார் நிறுவனங்கள் பரிசோதனை பெறுபேறுகளின்படி தொற்றாளர்களை இனம்காணும் பட்சத்தில் குறித்த தொற்றாளருக்கு சிகிச்சையளிக்கும் பொறுப்பை அந்த நிறுவனத்திற்கே நேரடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி சுகாதார அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் போது ஆயுர்வேத வைத்தியசாலை முறைமை வசதிகளையும் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

மே மாதம் 25 மற்றும் 28 ஆகிய இரு தினங்களிலும் பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டாலும் மக்களுக்கு வீட்டிலிருந்து வெளியில் செல்வதற்கு அனுமதி வழங்கப்படுவது அத்தியாவசியப்பொருட்களை கொள்வனவு செய்வதற்காக மட்டுமேயாகும்.

சில நாடுகளில் இருந்து தருவிக்கப்படவுள்ள தடுப்பூசிகள் இன்னும் சில நாட்களில் நாட்டை வந்தடையவுள்ளன.

தடுப்பூசிஏற்றும் நடவடிக்கைகளை விரைவுபடுத்தி தற்போதிருக்கும் நிலைமையை விரைவாக கட்டுப்படுத்த வேண்டிய தேவையை ஜனாதிபதி வலியுறுத்தினார். (ம-3)

## +3,547...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நாட்டில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 158,333ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3)

## கண்காணிப்பு...

போக்குவரத்து கட்டுப்பாடு நீக்கப்பட்டு பின்னர் அன்றைய தினம் இரவு 11.00 மணி முதல் மீண்டும் 28 ஆம் திகதி அதிகாலை 4 மணிவரையில் போக்குவரத்து கட்டுப்பாடு அமுல்படுத்தப்படும்.

இதன்போது அத்தியாவசிய தேவையின்றி செல்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்பட்டதாக நேற்று காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்திற்குள் 414 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி முதல் இதுவரையில் 11,320 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது மேல் மாகாணத்தில் 9,265 பேர் கண்காணிக்கப்பட்டு, முகக்கவசம் அணியாமை தொடர்பில் 2,590 பேருக்கு எச்சரிக்கை செய்யப்பட்டதுடன், 94 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல்மாகாணத்தின் எல்லையை கடக்க முற்பட்ட 2,250 வாகனங்களில் பயணித்த 2,880 பேர் சோதனைக்குட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக எல்லையை கடக்க முற்பட்ட 140 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றார். (ம-3)

LK Newspapers lktamil.com











*எப்படி வாழ்வது என்பதைக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் தொடர்ந்தால், நீங்கள் நீண்ட நாள் வாழ்வது உறுதி. – எஸ்னெகா*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பயணத் தடைக்கு முதல் நாள் புத்தாண்டுக்கு முதல் நாள் போல...

நாடு முழுவதிலும் இன்று (22.05.2021) பயணத்தடை அமுலுக்கு வருகிறது.

அடுத்து வரும் மூன்று தினங்கள் பயணத் தடை இருப்பதன் காரணமாக நேற்று 21ஆம் திகதி பொதுமக்கள் பொருட்களைக் கொள்வனவு செய்வதிலும் இதர தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதிலும் முண்டியடித்து நின்றதைக் காண முடிந்தது.

ஊரடங்கு உத்தரவு என்பதற்குப் பதிலாக பயணத்தடை என்ற சொற்பதத்தைப் பயன்படுத்துவதன் நோக்கம், பயணத்தடைக் காலத்தில் அத்தியாவசிய சேவைகள் இயங்கவும் மருத்துவ தொடர் சிகிச்சைகள் இயங்கவும் ஏற்பாடுகள் உண்டு.

அதனாலேயே பயணத்தடை என்ற புதிய சொற்பதம் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டது.

ஆனால் அடுத்துவரும் மூன்று நாட்கள் நாடு முழுவதிலும் பயணத்தடை என்றதும் பயணத்தடை எதற்காக அமுல்படுத்தப்படுகிறது என்பதைக்கூட மறந்து எங்கும் மக்கள் கூட்டம் முண்டியடித்துக் கொண்டது.

அதிலும் மதுபானசாலைகளுக்கு முன்பாக நின்றவர்களின் எண்ணிக்கையை பார்த்த போது கொரோனாத் தொற்றுத் தொடர்பில் மருத்துவத் தரப்பும் அரசாங்கமும் கருசனை கொண்டுள்ளதே தவிர, பொதுமக்களிடம் அதுபற்றி எந்த அக்கறையும் இல்லை என்பதை உணர முடிந்தது.

சுருங்கக்கூறின், பயணத்தடைக்கு முதல் நாள் புத்தாண்டுக்கு முதல்நாள்போல எங்கும் சனக் கூட்டம் நிறைந்து காணப்பட்டது.

புத்தாண்டுக் கொண்டாட்டத்தின்போது கட்டுப்பாடுகளை ஏற்படுத்தாததுதான் கொரோனாத் தொற்று இத்துணைதூரம் பரவுவதற்குக் காரணம் என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாக முன்வைக்கப்படும்போது,

பயணத் தடைக்கு முதல்நாள் எந்தவிதக் கட்டுப்பாடுகளும் நடைமுறைகளும் இல்லாமல் மக்கள், கூட்டம் கூட்டமாக நிற்கின்றனர் எனில்,

அந்த நாளில் கொரோனாத் தொற்று பரவாது என்று மக்கள் நினைக்கின்றனரா? என்பதுதான் புரியாமல் உள்ளது.

பொதுவில் மாகாணங்களுக்கிடையிலான தடை எதிர்வரும் 31ஆம் திகதி வரை அமுலில் இருப்பதாக அரசு அறிவித்துள்ளது.

அதேநேரம் தேசிய அடையாள அட்டை இலக்கத்தின் அடிப்படையில் மக்களின் நடமாட்டம் வரையறை செய்யப்பட்டிருந்தாலும் அது ஓரளவுக்கேனும் அமுலாகியதாக ஊகிக்க முடியவில்லை.

ஆக, கொரோனாத் தொற்றில் இருந்து எம்மைப் பாதுகாப்பதற்காக அமுலாகும் பயணத் தடைக்கு முதல்நாளை; புத்தாண்டுக்கு முதல் நாள் போல ஆக்கிவிடாதீர்கள் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

# முடக்கப்பட்டவேளை முல்லையில் தாக்குதல்

(பணிக்கன்குளம்)

முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹிச்சிராபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு புகுந்த முறிப்பு பகுதியினை சேர்ந்த குழு ஒன்று இரும்பு கம்பிகள் கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளது.

காணிப்பிணக்கு காரணமாக ஏற்பட்ட பிரச்சினை அடிதடியில் முடிவடைந்துள்ளது. முறிப்பினை சேர்ந்த குழுவினரே இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளார்கள். தாக்குதலின் போது இரண்டு பெண்கள் உள்ளிட்ட மூன்று பேர் காயங்களுக்குள்ளான நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். முடக்கப்பட்ட பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் கிராம மக்களை அச்சத்திற்குள்ளாக்கியுள்ளது.

முள்ளியவளை பொலிஸ் பிரதேசம் முடக்கப்பட்ட நிலையில் இவர்கள் முறிப்பு பகுதியில் இருந்து வந்து எவ்வாறுதாக்குதல்நடத்தினார்கள் என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.(4-8-281)

# வவுனியாவில் விபத்து; ஒருவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா, நகரின் மத்தியில் அமைந்துள்ள மணிக்கூட்டு கோபுர சந்தியில் டிப்பர் வாகனமும், சிறிய ரக மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வவுனியா புகையிரத நிலைய வீதியில் இருந்து சென்ற சிறிய ரக மோட்டார் சைக்கிள் ஒன்று மணிக்கூட்டு கோபுர சந்தியில் ஏ9 வீதியில் திரும்ப முற்பட்ட வேளை, யாழ். வீதியில் இருந்து கண்டி வீதிக்குள் நுழைந்த டிப்பர் வாகனம் மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளி விபத்துக்குள்ளானது.

இதில் சிறிய ரக மோட்டார் சைக்கிளில் பயணித்த 48 வயது மதிக்கதக்க நபர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-3,250)

### சாவகச்சேரி மற்றும் கொடிகாமத்தில்

# மதுப் போத்தல்களுடன் 7 பேர் நேற்று கைது

(கரணவாய்)

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின்போது பெருமளவான மதுபான போத்தல்கள் கைப்பட்டுள்ளதுடன் 7 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர், வடமாகாண மதுவரி உதவி ஆணையாளர் சோதிநாதன் உத்தரவுக்கமைய மதுவரி அத்தியட்சகர் ரி.தங்கராசுவின் வழிநடத்தலின் பேரில் சாவகச்சேரி மதுவரி பொறுப்பதிகாரி அசோகரத்தினம் தலைமையில் மதுவரி பரிசோதகர் ரசீகரன் குழுவினர் இணைந்து இந் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதில் சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பகுதிகள் திடீர் சுற்றிவளைப்புக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 750 மில்லி லீற்றர் அளவுடைய 30 அரச சாராயப்போத்தல்களும் 180 மில்லி லீற்றர் அளவுடைய 25 அரச சாராயப் போத்தல்களும் 500 மில்லி லீற்றர் அளவு கொண்ட 100 பியர் ரின்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றை எடுத்துச் சென்ற ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் மேற்கொண்டுள்ளனர். (ம-3,60)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி நீதிமன்ற வளாகம், அரசடி, மருதடி, ஆசிரியர் வீதி சந்தி, சாவகச்சேரி நகரம், சாவகச்சேரி பிரதேச செயலகம், டச்சுவீதி, கண்டுவில், கச்சாய் வீதி, கல்வயல் துர்க்கையம்மன் கோவில் பிரதேசம், மீனாட்சி அம்மன் கோவில் சங்கத்தானை, நுணாவில், நுணாவில் வைரவர் கோவில் பிரதேசம், பெருங்குளம் சந்தி சாவக்சேரி, தபால்அலுவலகம் சந்தி சாவகச்சேரி, புகையிரதநிலைய வீதி, பிரிட்டிஷ் கவுன்சில் ரக்கா வீதி, இயற்கை விஞ்ஞான பீடம், விஞ்ஞானபீடம், தியாகி அறக்கொடை நிலையம், றியோ கிறீம் ஹவுஸ், அரசடி பழம் வீதி சந்தி, கைலாசப் பிள்ளையார் கோவில், நல்லூர் கோயில், நாவலர் வீதி, இராசாவின் தோட்டம், பருத்தித்துறை வீதி, ரக்காவீதி சுண்டிக்குளி, இராமநாதன் வீதி புகையிரத குறுக்குச் சந்தி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி-4)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



## உள்ளம் சொல்வதைக் கேள்

❖ கடவுளிடம் அனைத்து இயல்புகளும் இருக்கின்றன. ஆனால், மனித இயல்பு மூலமாகத்தான் நாம் அவரைக் காண இயலும்.

❖ தெய்வீகம் எப்போதும் மனிதனிடம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதை விழிப்படையச் செய்து எழுந்திருக்கச் செய்யுங்கள்.

❖ ஒவ்வொரு கடமையும் புனிதமானது தான். கடமையில் பக்தியுடன் இருப்பது தெய்வவழிபாட்டில் மிக உயர்ந்த முறையாகும்.

❖ ஒருவனுடைய பண்பை உருவாக்குவதில் இன்பம், துன்பம் இரண்டுமே சரிசமமான பங்கைப் பெறுகின்றன. அதிலும் இன்பத்தைவிட துன்பமே சிறந்த ஆசானாக அமைகிறது.

❖ வாழ்க்கையில் தன்னிடத்தில் ஒன்றை இழுத்துக் கொள்ளும் சக்தியைப்போல அதை விலக்கும் சக்தியும் நம்மிடம் உள்ளது.

❖ தன்னலத்தை ஒழிப்பதில் தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது. உன்னைத்தவிர யாராலும் உன்னை மகிழ்விக்க முடியாது.

Newspapers BTamil.com

# பிரான்ஸ் கிண்ண கால்பந்து போட்டியில் 13 ஆவது முறையாக பாரிஸ் செயிண்ட் சம்பியன்




பிரான்ஸ் கால்பந்தில் முதன்மையான நாக் அவுட் கிண்ண போட்டித் தொடரான, பிரான்ஸ் கிண்ண கால்பந்து தொடரில், பாரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

ஒவ்வொரு ஆண்டு நடைபெறும் இந்த போட்டித் தொடரின், நடப்பு ஆண்டுக்கான இறுதிப் போட்டி உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஸ்டேட் டி பிரான்ஸ் விளையாட்டரங்கில் நடைபெற்ற எதிர்பார்ப்பு மிக்க இப்போட்டியில், பாரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணியும் மொனாகோ அணியும் பலப்பரீட்சை நடத்தின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணி 2-0 என்ற கோல்கள் வெற்றிபெற்றது.

இதில் பாரிஸ் செயிண்ட் ஜேர் மைன் அணி சார்பில், மயுரோ இகார்டி போட்டியின் 19ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் கிளியன் எம்பாப்வே 81ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் அடித்தனர்.பிரான்ஸ் கிண்ண கால் பந்து தொடரில், அதிகப்பட்சமாக பாரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணி 13முறை சம்பியன் பட்டத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6)

## உலகின் எந்த அணியையும் வீழ்த்தும் வல்லமை இந்திய அணியிடம் உள்ளது-புஜாரா



இந்தியா-நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் ஐ.சி.சி உலக சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டி இங்கிலாந்தில் உள்ள சவுத்தாம்ப்டனில் அடுத்த மாதம் 18 ஆம் திகதி தொடங்குகிறது.

ஆனால் கடந்த சில ஆண்டுகளாக இந்திய அணி டெஸ்ட் கிரிக்கெட்டில் அபாரமாக விளையாடி வருகிறது. ஆஸ்திரேலியா மண்ணில் அடுத்தடுத்து தொடர்களை வென்று அசத்தியுள்ளது.

இந்த நிலையில் உலகின் எந்த இடத்திலும், எந்த அணியையும் வீழ்த்தும் வல்லமை இந்திய அணிக்கு உள்ளது என நட்சத்திர டெஸ்ட் பட்ஸ்மேன் புஜாரா தெரிவித்துள்ளார்.

மேலும், இதுகுறித்து புஜாரா கூறுகையில் அவர்களுடைய பந்து வீச்சு சிறந்த சமபலம் கொண்டது. அவர்களுடைய பந்து வீச்சை போதிய அளவிற்கு எதிர்கொண்டுள்ளோம். அவர்கள் எப்படி செயல்படுவார்கள் என்பதற்கான போதுமான ஐடியா எங்களிடம் உள்ளது.

நியூசிலாந்துக்கு எதிராக கடந்த முறை அவர்களது சொந்த மண்ணில் விளையாடினோம்.

நாங்கள் எங்களுடைய அடிப்படையை சரியாக அமைத்து விட்டால், உலகின் எந்த இடத்தில் விளையாடினாலும், எந்த அணியை எதிர்த்து விளையாடினாலும் வெற்றி பெறும் வல்லமை எங்களிடம் உள்ளது" என்றார். (4-6)

## இலங்கை தொடருக்காக இந்திய அணியில் டிராவிட்



இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரின் போது, இலங்கை தொடரும் நடைபெற இருப்பதால் ரவி சாஸ்திரி இரண்டு இடத்திலும் பணிபுரிய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.


இந்த நிலையில் ராகுல் டிராவிட் தலைமை பயிற்சியாளராக நியமிக்கப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ராகுல் டிராவிட் பிசிசிஐ-யின் தேசிய கிரிக்கெட் அகடமியில் தலைமை ஆலோசகராக உள்ளார்.

ராகுல் டிராவிட் இந்தியா 'ஏ' அணி, 19 வயதிற்குட்பட்டோருக்கான இளையோர் அணிகளுக்கு தலைமை பயிற்சியாளராக இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (4-6)

LK Newspapers BTamil.com

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## ஜெனீவா பகிரங்க டென்னிஸ் ஷபலோவ் அரையிறுதிக்கு தகுதி



ஜெனீவா பகிரங்க டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியில், கனடாவின் டேனிஸ் ஷபலோவ் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

எதிர்பார்ப்பு மிக்க காலிறுதிப் போட்டியில், கனடாவின் டேனிஸ் ஷப லோவ், செர்பியாவின் லால்லோ டீரை எதிர் கொண்டார்.

இப்போட்டியில் சிறப்பாக விளையாடிய கனடாவின் டேனிஸ் ஷபலோவ், 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கு களில் வெற்றிபெற்று அரையிறுதிக்குள் நுழைந்தார். (4-6)

## பாகிஸ்தான் சுப்பர் லீக் இருபது-20 அபுதாபியில் நடத்த அனுமதி



ஒத்திவைக்கப்பட்ட ஆறாவது பாகிஸ்தான் சுப்பர் லீக் இருபது-20 தொடர், அபுதாபியில் நடைபெறவுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதற்கு ஐக்கிய அரபு அமீரகத்திடம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அனுமதி கோரியிருந்த நிலையில், இதற்கு தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தொடரை நடத்துவதற்கு கொரோனா தொடர்பான நடைமுறையில் உள்ள சிலவற்றிற்கு விலக்கு அளித்துள்ள நிலையில், ஐக்கிய அரபு அமீரகம் வரும் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி அவசியம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் சுப்பர் லீக் இருபது-20 தொடர், கடந்த மார்ச் 4 ஆம் திகதி முடிவெடுக்கப்பட்டது. இதன்போது 34 போட்டிகளில் 14 போட்டிகள் முடிவடைந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

முதல் 20 போட்டிகள் கராச்சியிலும் மீதமுள்ள 10 லீக் போட்டிகளும் நான்கு பிளே ஓஃப் போட்டிகளும் லாகூரில் நடைபெற இருந்தன.

தற்போது தொடரை நடத்துவதற்கான பணிகளை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முன்னெடுத்து வருகின்ற நிலையில், மீதமுள்ள 20 போட்டிகளும் எப்போது நடைபெறும் என்பதை விரைவில் அறிவிக்கவுள்ளது. (4-6)

# இஸ்ரேல்-பாலஸ்தீனத்திற்கிடையே போர் நிறுத்தம்

**(ஜெருசலேம்) கடந்த 11 நாட்களாக தொடர் மோதலின் பின் இஸ்ரேல் - பாலஸ்தீனத்திற்கு இடையில் போர் நிறுத்த ஒப்பத்தம் ஆரம்பமாகியுள்ளது. இஸ்ரேல் நாட்டுடன் பரஸ்பர மற்றும் தொடர்ச்சியான போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்று போடப்பட்டு உள்ளது என ஹமாஸ் அமைப்பின் அதிகாரி ஒருவர் உறுதிப் படுத்தியுள்ளார்.**



இந்த ஒப்பந்தம் நேற்று அதிகாலை 2 மணி முதல் அமுலுக்கு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

காசாவின் போர் நிறுத்த ஒப்பந்த முடிவை இஸ்ரேலிய அமைச்சரவையும் உறுதி செய்துள்ளது. ஆனால், எந்த நேரத்தில் இருந்து என்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் நிலவி வருகிறது. காசா முனை மற்றும் மேற்குக்கரை என்று மொத்தம் இரண்டு பகுதிகளாக பாலஸ்தீனம் உள்ளது.

காசா முனையை ஹமாஸ் என்ற போராளிகள் அமைப்பு தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. இந்த அமைப்பை இஸ்ரேல் பயங்கரவாத அமைப்பாகக் கருதுகிறது.

இஸ்ரேல் - பாலஸ்தீன மோதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 263 ஆக அதிகரித்துள்ளது. அதில் காசா முனையில் ஹமாஸ் அமைப்பினர், குழந்தைகள், பெண்கள் உட்பட 227 பேரும் மேற்கு கரை பகுதியில் 24 பேரும் இஸ்ரேலில் 12 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே தொடர்ந்து மோதல் நடைபெற்று வருகிறது. இரு தரப்பினரும் தாக்குதல் நடத்தி வருவதால் பதற்றம் அதிகரித்துள்ளது. சண்டையை நிறுத்த உலக நாடுகள் முயற்சித்து வரும் சூழ்நிலையில் அந்த முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்தன. இந்நிலையில், இஸ்ரேல் நாட்டுடன் பரஸ்பர மற்றும் தொடர்ச்சியான போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்று போடப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-4)

## பொலிஸ்-நக்சலைட்டுகள் மோதல் மகாராஷ்டிராவில் பரபரப்பு

(சென்னை)

இந்தியா - மகாராஷ்டிரா மாநிலம் கட்சிரோலி மாவட்டத்தில் உள்ள காட்டுக்குள் நக்சலைட்டுக்களை சுற்றிவளைத்து நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் பொலிஸார் கடும் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்தத் தாக்குதலில் டசின் கணக்கான நக்சலைட்டுக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மோதல் இடம்பெற்றுவரும் பகுதியில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை காலை வரை 13 நக்சலைட்டுக்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக இந்த விசேட தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள மகாராஷ்டிரா பொலிஸ் சி-60 என்ற விசேட பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த மோதல் நடவடிக்கை மகாராஷ்டிரா பொலிஸாருக்கு மிகப்பெரிய வெற்றியாக அமைந்துள்ளது. இந்த நடவடிக்கையில் அதிகமான நக்சலைட்டுகள் அழிக்கப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது என கட்சிரோலி துணை பொலிஸ் ஆய்வாளர் ஜெனரல் சந்தீப் பாட்டீல் தெரிவித்துள்ளார். (8-4)

## இந்தியாவில் சற்றுக் குறையும் கொவிட் தொற்று

(சென்னை)

இந்தியாவில் நேற்று முன்தினம் மட்டும் 2 இலட்சத்து 76 ஆயிரத்து 110 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அந்த வகையில் இந்தியாவில் இதுவரை கொவிட் தொற்று உறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 2 கோடியே 57 இலட்சத்து 72 ஆயிரத்து 440 ஆக உயர்வடைந்துள்ளது.

மேலும் இந்த காலப்பகுதியில் 3 ஆயிரத்து 874 பேர் கொவிட் தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய கொவிட் தொற்றினால் இந்தியாவில் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 87 ஆயிரத்து 122 ஆக உயர்வடைந்துள்ளது. (8)

LK Newspapers BTamil.com



செவ்வாய் குறித்த ஆராய்ச்சிகளுக்காக சீனாவால் அனுப்பப்பட்ட சுரொங் விண்ணூர்தி (Zhurong rover) செவ்வாயிலிருந்து முதல் புகைப்படத்தை அனுப்பியுள்ளது.

## தமிழகத்தில் கார் டாக்சி அம்புலன்ஸ்




(சென்னை)

அம்புலன்ஸ்களுக்கு பற்றாக்குறை உள்ளதால் தன்னார்வலர்கள் இணைந்து, டாக்சி அம்புலன்ஸை உருவாக்கி உள்ளனர்.

இது குறித்து, தமிழக சுதந்திர வாடகை வாகன உரிமையாளர்கள் சங்கத்தின் செயலர் ஜூட் மேத்யூ கூறியதாவது,

தமிழகத்தில் அம்புலன்ஸ் வாகனங்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், அரசுக்கு உதவும் வகையில் எங்களின் கால் டாக்சிகளை அம்புலன்ஸ்களாக மாற்றி இருக்கிறோம்.

ஒரு கால்டாக்சியை அம்புலன்ஸில் ஒட்சிசன், படுக்கை வசதிகளுடன், நோயாளிகளை சிகிச்சைக்காக அழைத்துச் செல்கிறோம். நோயாளிகளை அழைத்துச் செல்ல கட்டணம் ஏதும் வசூலிப்பதில்லை. அதேநேரம் எரிபொருள் செலவுக்காக அவர்கள் கொடுக்கும் தொகையையும் மறுப்பதில்லை என அவர் தெரிவித்தார். (8-4)

## ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 7 பேரையும் விடுதலை செய்யுங்கள்

### தமிழக முதல்வர் ஜனாதிபதிக்கு கடிதம்

(டில்லி)

தமிழ்நாடு அமைச்சரவைத் தீர்மானத்தை ஏற்று, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு சிறையில் உள்ள 7 பேரையும் விடுதலை செய்ய ஆணையிட வேண்டுமென இந்திய குடியரசுத் தலைவருக்கு தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடிதம் அனுப்பியுள்ளார்.

பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேர் விடுதலையை குறிப்பிட்டும் தற்போது கொரோனா பரவும் சூழலை கருத்திற் கொண்டும் விடுதலைசெய்ய தீர்மானம் எடுக்குமாறு இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்துக்கு முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத்தண்டனை அனுபவித்துவரும் பேரறிவாளன் உட்பட 7 பேரையும் விடுவிக்க தமிழக அமைச்சரவை தற்போது தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.

அதன்படி அமைச்சரவை தீர்மானத்தின் மீது முடிவெடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது என்று குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-8)

## 15 நிமிடத்தில் கொவிட் முடிவுகள்

(டில்லி)

கொவிட்-19 பரிசோதனை முடிவுகளை 15 நிமிடங்களில் பெற்றுக் கொள்ளக்கூடிய சுய பயன்பாட்டு ரெபிட் அன்டிஜன் பரிசோதனை கருவி, இந்தியாவில் உருவாக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பூனேயை தளமாகக் கொண்டு இயங்கும் நிறுவனம் ஒன்றினால் இந்த பரிசோதனை கருவி தயாரிக்கப்பட்டுள்ளது.

கொவிசெல்ஃப் என்ற இந்தியாவின் முதலாவது சுய பயன்பாட்டு ரெபிட் அன்டிஜன் பரிசோதனை கருவியில், இரண்டு நிமிடங்களில் பரிசோதனை மேற்கொண்டு 15 நிமிடங்களில் முடிவைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தப் பரிசோதனை கருவிக்கு இந்திய மருத்துவ ஆய்வு சபை அனுமதி வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-8)

# பலாலி வடக்கில் 199 குடும்பங்கள் தனிமைப்படுத்தலில் - அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

பலாலி வடக்கில் 199 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மகேசன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய கொரோனா நிலைமை தொடர்பில் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பலாலி வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் தொற்றாளர்கள் அதிகம் இனங்காணப்பட்டதன் அடிப்படையில் அந்தோணிபுரம் கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. அதில் 199 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்டிருந்த கொடிகாமம் பிரதேசம் விடுவிக்கப்பட்டுள்ளது. இலங்கை பூராகவும் பயணத் தடை அரசினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

எனவே பயணத்தடை காலப்பகுதியிலே பொதுமக்கள் தமது வீடுகளிலிருந்து பயணத் தடையினை அனுசரித்து செயற்பட வேண்டும்.

பயண தடையானது பொது மக்களுடைய பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக தான் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.. எனவே பொதுமக்கள் இந்த பயணத் தடையினை அனுசரித்து செயற்பட வேண்டியது அவசியமாகும்.

அத்தோடு யாழ்.மாவட்டத்தில் இடைத்தங்கல் சிகிச்சை நிலையங்களாக மேலதிகமான இரண்டு இடங்களை நாங்கள் புதிதாக ஆரம்பித்துள்ளோம். அதாவது வட்டுக்கோட்டை மற்றும் நாவற்குழியில் 450 பேருக்கு மேற்பட்டோர் தங்க வைப்பதற்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதைவிட 4 ஆதார வைத்தியசாலைகளிலும் ஒவ்வொரு விடுதிகளும் கொரோனா நோயாளர்களை தங்க வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தை பொறுத்தவரை முன்னரை விட தற்போது பி.சி.ஆர். பரிசோதனை எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (5-4-33-18)

# தவிசாளருக்கு தொற்று செயற்பாடுகள் நிறுத்தம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை நகர சபையில் வைத்து பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

சாவகச்சேரி நகர சபையின் செயலாளர் மற்றும் சபை உறுப்பினர் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் சபைச் செயற்பாடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் உறுப்பினர்கள் சுய தனிமைப்படுத்தலில் உள்ளனர்.(5-4-30)



வடமராட்சியில் நேற்று முன்தினம் இரவு பெய்த மழையினால் கரணவாயில் பல பகுதிகள் வெள்ளக்காடாகக் காணப்படுகின்றன. பெரும்பாலான விவசாயிகள் வயல் பகுதியில் வெங்காயம், கீரை வகைகள், உப உணவுப் பயிர்ச்செய்கைகள் பாதிப்படைந்துள்ளன. அத்துடன் தென்னை மரம் முறிந்து விழுந்துள்ளன. (படம்:-கரணவாய்)

# வீதி அபிவிருத்திக்கு பறிக்கப்பட்ட கற்கள் சூறையாடப்படுகின்றன

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட மறவன்புலவு கிராமத்தில் வீதி அபிவிருத்திக்கு பறிக்கப்பட்ட பெருமளவான கற்களை விசமிகள் சூறையாடி வருவதாகவும் இது தொடர்பாக உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தியும் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியிருப்பதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக பிரதேச மக்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த 2009 ஆம் ஆண்டு மீளக்குடியமர்த்தப்பட்ட பிரதேசமான மறவன்புலவு கிராமத்தின் மணற்காட்டு வீதி புனரமைப்பிற்கான நடவடிக்கை அப்போதைய வடக்கின் வசந்தம் வேலைத்திட்டம் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்திப் பணிக்காக பெருமளவான கற்கள் வீதியின் இரு மருங்கும் பறிக்கப்பட்டு பணிகளும் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் குறித்த வீதியை ஒப்பந்தம் எடுத்த ஒப்பந்தகாரர் வீதி அபிவிருத்திப் பணிகளை இடை நடுவே கைவிட்டுள்ளனர்.

அன்றிலிருந்து பத்து வருடங்களுக்கு மேலாக பாதுகாப்பாக இருந்த கற்களை தற்போது சிலர் சூறையாடி வருகின்றனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேசசபை மற்றும் பிரதேச செயலகம் தெரிவித்தும் எந்தவிதமான நடவடிக்கைகளும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (5-4-30)

# முகக்கவசம் வழங்கப்பட்டது

(கரணவாய்)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தலிலிருந்து பாதுகாப்பு நடவடிக்கை களை மேற்கொள்வதற்காக மிகவும் ஆபத்தான சூழ்நிலை யிலும் மக்களோடு மக்களாக கடமையாற்றிய கிராம உத்தியோகத்தர்களுக்கு நெல்லியடி வர்த்தக சங்கம் KN95 முகக் கவசங்களை வழங்கியுள்ளது. கரவெட்டி பிரதேச செயலக தலைமை கிராம நிர்வாக அலு வலர் கி.ரவிக்குமாரிடம் இம் முகக் கவசங்கள் வழங்கப்பட் டன. (5-4-60)

# யாழில் 90.8 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவு

(நல்லூர்)

யாழ்ப்பாணத்தில் 90.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக திருநெல்வேலி வானிலை அவதானிப்பு நிலைய பொறுப்பதிகாரி பிரதீபன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு பின்னர் யாழ்ப்பாண குடாநாட் டின் பல்வேறு இடங்களிலும் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணத்தில்16.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பருத்தித்துறையில் 144.5 மில்லி மீற்றர். சாவகச்சேரியில் 90.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் இதனடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 90.8 மில்லி மீற்றர் மழை வீழ் ச்சி பதிவாகியுள்ளதோடு எதிர் வரும் மூன்று நாட்களுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் மழையுடன் கூடிய கால நிலை நிலவும் எனவும் தெரிவித்துள்ளார். (5-4-33)

# தொடர்ச்சியாக தனிமைப்படுத்தப்படும் குடும்பங்களுக்கு உதவி வழங்கப்படுகிறது

## –யாழ்.அரச அதிபர்–

(நல்லூர்)

யாழில் இதுவரை தனிமைப்படுத்தப்பட்டுள்ள 7251 குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உணவுப் பொதிகள் வழங்கப்பட்டிருப்பதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தை பொறுத்தவரை தொற்றாளர்களுடன் தொடர்பினைப் பேணிய அடிப்படையில் சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலுக்கு அமைய வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் இடைக்கால நிவாரண உதவியாக அந்த 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உணவுப் பொதியை மாவட்ட செயலகத்தின் வழிகாட்டுதலின் கீழ் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்படுகிறது.

அதன் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் இன்றுவரை சுமார் 7251 குடும்பங்களுக்கு அரசினால் வழங்கப்படும் 10 ஆயிரம்ரூபாய்பெறுமதிகொண்ட உணவுப் பொதி தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இந்த உதவி வழங்கப்பட்டு வருகின்றது. இந்தக் குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கும் காலத்தில் எமக்கு உரிய விபரங்கள் கிடைக்கப் பெற்றவுடன் அவர்களுக்கு வழங்கப்படும்.

அதாவது விபரங்கள் கிடைக்கப் பெறுவதன் அடிப்படையிலேயே உதவிப் பொருட்களை வழங்க முடியும். இந்த விடயம் தொடர்பில் சகல பிரதேச செயலர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். (5-4-33)

# தலைமைத்துவ பண்புகளை மேம்படுத்தும் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

நாட்டின் நாளைய தலைமுறையினரிடையே தலைமைத்துவ பண்புகளை மேம்படுத்தும் நோக்கில் V-FORCE ஏற்பாடு செய்திருந்த தமிழ் மொழி மூல தலைமைத்துவ செயலமர்வின் கன்னி அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

சவால்களை வெற்றிகொள்ளும் துணிவினை இளவல்களிடையே மேம்படுத்தும் நோக்கில் V-FORCE தலைமைத்துவ செயலமர்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழி மூலமான தலைமைத்துவ செயலமர்வின் முதல் அமர்வில் அகில இலங்கை கம்பன் கழகத்தின் ஸ்தாபகர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமைத்துவ பண்புகள் தொடர்பில் விசேட உரையாற்றினார்.

தலைமைத்துவ பண்புகளை மேம்படுத்துவதில் அதீத ஆர்வமுள்ள நூற்றுக்கணக்கான இளவல்கள் ZOOM மற்றும் FACEBOOK ஊடாக இந்த செயலமர்வில் கலந்துகொண்டனர். இவர்களில் V-FORCE தன்னார்வ அங்கத்தவர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் அடங்குகின்றனர்.

எதிர்காலத்திலும் இவ்வாறான தலைமைத்துவ செயலமர்வுகளை முன்னெடுக்கவுள்ள V-FORCE, பங்கேற்கும் அனைவருக்கும் தலைமைத்துவ பயிற்சி சான்றிதழை வழங்கவுள்ளமை விசேட அம்சமாகும். (5-4)

# இதுவரை 5 சிறுவர்கள் கொரோனாவால் பலி 1000 இற்கும் அதிகமானோருக்கு தொற்று

**(கொழும்பு)**

**நாட்டில் கொவிட் தொற்றினால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அதில் 5 பேர் கொவிட் தொற்றினால் மரணித்துள்ளதாக சிறுவர் நோயியல் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.**

அதனால் 12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு கொவிட் தடுப்பூசி வழங்குவது மிக முக்கியமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் சிறுவர்களுக்கு இடையில் கொவிட் தொற்று வேகமாக பரவும் அபாயம் இருப்பதனால் அவர்களை பாதுகாப்பதற்காக கொவிட் தடுப்பூசி வழங்குவது மிக அவசியம் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன், சில நாடுகளில் சிறுவர்களுக்கு கொவிட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருவதாக வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார். (நி-4)

# நிலைமை மோசமடையும் என அரசு நினைக்கவில்லை-வாசுதேவ

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுப் பரவலானது இந்தளவு பயங்கரமான நிலைமையை நாட்டினுள் உருவாக்குமென அரசாங்கம் ஒருபோதும் நினைக்கவில்லையென நீர்வளத்துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நேற்று முன்தினம் தெரிவித்தார்.

சூம் தொழில்நுட்பம் மூலம் நடந்த ஊடகவியலாளர்களுக்கு தகவல் வழங்கும் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கொரோனா முதலாவது சுற்றின் பின் ஓரளவு தணிந்துவிடுமென அரசாங்கம் மதிப்பிட்டது. ஆனால், நாம் எதிர்பார்த்ததைவிட பயங்கரமான நிலையில் அது நாட்டினுள் வியாபித்து விட்டது.

அது இப்போது தீவிரமடைந்து காணப்படுகிறது. எதிர்பாராத வகையில் பாதிப்புகள் அதிகமாகி வருகின்றன.

இதனால் வைத்தியசாலைகளில் இடநெருக்கடி நிலவுகிறது. அதனால் இந்நிலைமைகளைச் சமாளிப்பதற்காக கொரோனா நோய் அடையாளம் காணப்படாத நோயாளர்களை வீடுகளில் தங்க வைத்து சிகிச்சையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# ராகலையில் கோரவிபத்து; 26 பேர் காயம்





(கொழும்பு)

ராகலை-உடப்புஸ்ஸலாவை பிரதான வீதியில் சென்லெணாட்ஸ் நடுக்கணக்குக்கு அருகில் 35 பேருக்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்களை ஏற்றிச்சென்ற ட்ரக்டரொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம் பெற்ற இவ்விபத்தில் 26 பேருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதுடன் அவர்கள் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறித்த ட்ரக்டர் வேகக்கட்டுப்பாட்டை மீறியமையால் பிரதான வீதியின் வளைவிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. (நி-4)

# விசேட பூஜை வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத்திருநாட்டில் வாழும் மக்களும் உலகெங்கிலும் வாழும் மக்களும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறுகின்றன.

அந்தவகையில் நாளை 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு கோப்பாய் புத்தூர் கன்னியர் வைரவர் ஆலயத்தில் விசேடபூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ கிஸ்ண மூர்த்திக்குருக்கள் அருளாசி உரையும் வேதபாராயண மும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம் பெறும் "ஆலய தரிசனம் " நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒலிபரப்பு செய்யப்படும். (5-4)

# யாழ். உள்ளிட்ட 3 மாவட்டங்களில் தனிமைப்படுத்தல் உத்தரவு

(கொழும்பு)

நாட்டில் மேலும் 3 மாவட்டங்களைச் சேர்ந்த 9 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உடன் அமுலாகும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பலாலி வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு உட்பட மட்டக்களப்பு, மொனராகலை ஆகிய மாவட்டங்களின் 9 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளே இவ்வாறு தனிமைப் படுத்தப்பட்டுள்ளன. (நி-4)

# போர்ட் சிட்டி ஆணைக்குழுவின் பணிப்பாளராக பசில் ராஜபக்ஷ?

(கொழும்பு)

நிறைவேற்றப்பட்டுள்ள போர்ட் சிட்டி சட்டமூலத்தின் பிரகாரம், போர்ட் சிட்டி ஆணைக்குழுவின் முதலாவது பணிப்பாளர் பதவிக்கு முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ஷ நியமிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதாக அவரை மேற்கோள்காட்டி தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றத்தில் மேலதிக வாக்குகளால் கொழும்பு போர்ட் சிட்டி சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டது.

இதனையடுத்து, போர்ட் சிட்டி ஆணைக்குழு அமைக்கப்படவுள்ளதோடு முதலீடுகளும் சேர்க்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி-4)

# கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது



(மன்னார்)

மன்னார் பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள காட்டாஸ்பத்திரி பகுதியில் சுமார் 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கேரளக் கஞ்சா பொதிகளை பேசாலை பொலிஸார் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை கைப்பற்றியுள்ளதோடு சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

சுமார் 5கிலோ 575 கிராம் எடை கொண்ட கஞ்சா பொதிகள் இவ்வாறு பேசாலை பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கேரளக் கஞ்சா பொதியையும், அதனை தன்வசம் வைத்திருந்த காட்டாஸ்பத்திரி பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவரையும் இவ்வாறு கைது செய்துள்ளனர். சந்தேக நபர் மேலதிக விசாரணையின் பின் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் படவுள்ளதோடு, கைப்பற்றப்பட்ட கஞ்சா பொதி மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-8-285)


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

**சந்தைகள், இறைச்சிக் கடைகளினை குத்தகைக்கு வழங்குவதற்கான இடைக்கால மீள் கேள்வி அறிவித்தல் திகதி மாற்றம் தொடர்பான பகிரங்க அறிவித்தல்-2021**

அரசினால் வெளியிடப்பட்ட **EST-6 / 03/ LEA/ 3381** இலக்க, 18.05.2021 ஆம் திகதிய விசேட விடுமுறை தின சுற்றறிக்கைக்கமைவாக, சபையினால் கீழ்க் குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக் கடைகளினை 2021 ஆம் ஆண்டின் குறிக்கப்பட்ட காலத்திற்கு (01.06.2021 - 31.12.2021) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி திறத்தல் திகதியானது **28.05.2021 (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 02.00** என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை பகிரங்கமாக அறியத்தருகின்றேன்.

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**
**2021.05.22.**

(C-2185)


LK Newspapers BTamil.com

# முல்லைத்தீவு ஆடைத்தொழிற்சாலையை நிரந்தரமாக மூடுங்கள்

## சிவில் அமைப்பு எச்சரிக்கை

(அக்கராயன்)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்குகின்ற ஆடைத் தொழிற்சாலையினை நிரந்தரமாக மூடுவதற்கு மாவட்டத்தின் உயரதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட சிவில் அமைப்புகளின் தலைவியும் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினருமான திருமதி.இமக்குலேற்றா புஸ்பானந்தன் தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்குகின்ற ஆடைத் தொழிற்சாலையினால் தான் மாவட்டத்தில் 250 இற்கு மேற்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டிருக்கின்றனர்.

ஒரு கொத்தணி பரவல் தொடங்கியுள்ள நிலையில் குறித்த ஆடைத் தொழிற்சாலையினை நிரந்தரமாக மூடுங்கள். எமது மாவட்டத்திற்கு ஆடைத் தொழிற்சாலை தேவையில்லை.

அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தொழில் இழக்கின்ற பெண்களுக்கு வேறு தொழில்களை பெற்றுக் கொடுங்கள்.

ஆனால் மாவட்டத்தின் பெருமளவு கொரோனா நோயாளர்கள் இனங்காணப்பட்ட ஆடைத் தொழிற்சாலையினை நிரந்தரமாக மூடுங்கள்.

ஆடைத் தொழிற்சாலையினால் தான் இன்று மாவட்டமே கொரோனா அபாயத்திற்குள் சிக்குண்டுள்ளது.

மாவட்டத்தில் 400 இற்கு மேற்பட்ட கொரோனா தொற்றாளர்கள் மறைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் எல்லோரையும் காப்பாற்றுவதற்கு வெளிப்படையாக சிகிச்சையினைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். (4-8-350)

## தளர்த்தப்பட்டது முடக்கல் நிலை

### முண்டியடிக்கும் மக்கள்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு ஆகிய பொலிஸ் பிரிவுகள் கடந்த 17 ஆம் திகதி இரவு 11 மணிமுதல் முழுமையாக முடக்கப்பட்டன.

காலை 6.30 முதல் குறித்த முல்லைத்தீவு மாவட்டத்தின் 11 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தவிர ஏனைய பிரிவுகள் முடக்க நிலையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மக்கள் சுகாதார நடைமுறைகளை பேணாது அதிகளவில் ஒன்று கூடி பொருட்களை வாங்குவதற்காக முண்டியடிக்கும் நிலைமைகளை முல்லைத்தீவில் நேற்று காணக்கூடியதாக உள்ளது.

இதேவேளை புதுக்குடியிருப்பு பிரதான நகரம் முடக்கப்பட்ட பகுதிகளில் உள்ளமையில் அங்கு கடைகள் அனைத்தும் பூட்டப்பட்ட நிலையில் நகர் பகுதி வெறிச்சோடி காணப்படுகிறது. (4-8-281)

## வவுனியாவில் 12 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தொடர் கண்காணிப்பு

(நெளுக்குளம்)

வவுனியாவில் 12 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தவுள்ளதாக வவுனியா பிராந்திய தொற்றுநோயியலாளர் வைத்தியர் லவன் தெரிவித்தார்.

வவுனியாவில் அதிகரித்து வரும் கொரோனா தொற்றுநோயின் சமகால நிலவரம் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், வவுனியா மாவட்டத்தில் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவு அதிகமான மக்கள் தொகையை கொண்டமைந்துள்ளது. இதனால் அந்த பகுதியில் தொற்று அதிகரிக்கும் ஆபத்தான நிலைமை உள்ளது. அந்தவகையில் வவுனியா பிரதேச செயலக பிரிவில் அதிக மக்கள் தொகையினைக் கொண்ட 12 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தொடர்பாக நாம் விசேட கவனம் செலுத்தி வருகின்றோம்.

அத்துடன் இறப்புக்களை தவிர்ப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் செய்திருக்கின்றோம். 152 கட் டில்வசதிகள் தற்போது இருக்கின்றன. விரைவில் 200 ஒட்சிசன் வசதிகளுடன் கூடிய படுக்கை வசதிகளை ஏற்படுத்துவதற்கான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளோம். குறிப்பாக அவசர சிகிச்சைப்பிரிவில் உள்ள ஒரு நோயாளரை பராமரிப்பதற்கு 50 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வரையில் ஒருநாளில் செலவாகும். கடந்த நாட்களை போல இல்லாமல் எதிர்வரும் 100 நாட்களில் பரவல் விகிதம் அதிகமாக இருக்கும். அதற்கான முன்னேற்பாடுகளையும் நாம் எடுத்துள்ளோம். அத்துடன் கொவிட் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் பொலிஸாரின் எண்ணிக்கையினை அதிகரித்து வழங்க வேண்டுமென்று பொலிஸ் திணைக்களத்திடம் கேட்டுகொள்கின்றோம் என அவர் தெரிவித்தார். (4-8-299)

## முல்லை.கடற்கரையில் இயற்கையான மணல் மேடுகள் அழிக்கப்படுகின்றன

(அக்கராயன்)

முல்லைத்தீவு கடற்கரையை அண்டிய பகுதிகளில் தென்னை நடுகை என்ற பெயரில் மணல் வெளியிடங்களுக்குச் செல்வதை உடன் தடுத்து நிறுத்துங்கள் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

சிலாவத்தையில் இருந்து உப்புமாவெளி, உடுப்புக்குளம், அளம்பில், செம்மலை போன்ற கடற்கரை பகுதிகளில் இயற்கையான மணல் திட்டுகள் நிறைந்த பகுதிகளை விலைக்கு வாங்குபவர்கள் கனரக இயந்திரங்களின் உதவியுடன் இயற்கையான மணல் மேடுகளை சமதரையாக்கி தென்னை நடுகைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆழிப் பேரலை 2004இல் ஏற்பட்ட போது இப்பகுதிகளில் இயற்கையான மணல் மேடுகள் இருந்ததன் காரணமாக ஆழிப்பேரலை பெரியளவில் தாக்கவில்லை.

ஆனால் தற்போது கடற்கரையினை அண்மித்த பகுதிகள் சமதரையாக மாற்றப்படும் போது ஆழிப்பேரலை, கடற்கொந்தளிப்புகளின் போது பெருமளவு இடங்களுக்கு கடல் நீர் பரவக்கூடிய அபாய நிலைமை காணப்படுகின்றது.

தென்னை நடுகைக்கு அனுமதி வழங்குகின்ற அதிகாரிகள் கடற்கரையில் இருந்து எவ்வளவு தூரத்தில் நிலத்தினை சமப்படுத்த வேண்டும். இயற்கையான மண்மேடுகளை கண்டபடி சமப்படுத்தாதபடி பாதுகாக்க வேண்டும் என்ற ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

தென்னை நடுகைக்கென கடற்கரைகளில் காணிகளை வாங்கியவர்கள் தமது காணிகளில் இருந்து பெருமளவு மணல்களை டிப்பர்களில் யாழ்ப்பாணத்திற்கு ஏற்றுமதி செய்வதாக இப்பகுதி பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன.

கடந்த பத்தாண்டுகளாக முல்லைத்தீவு கடற்கரையில் தொடர் மணல் அகழ்வு நடைபெறுவதாக கரைதுறைப்பற்று பிரதேச செயலகம், மாவட்டச் செயலகக் கூட்டங்களில் தொடர்ச்சியாக தகவல்கள் தெரியப்படுத்தப்பட்டு வரும் நிலையில் முல்லைத்தீவு கடற்கரையில் இருந்து நாள்தோறும் மணல் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-8-350)

LK Newspapers BTamil.com

## பயிர்களை நாசம் செய்வதற்கு இரவில் யானை, பகலில் குரங்கு

### அமைதி காக்கும் அதிகாரிகள்


(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உப உணவுப் பயிர்ச் செய்கைகளில் அழிவுகளை ஏற்படுத்துவதில் குரங்குகள் முதன்மை இடத்தினை வகிக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள், விவசாயத் திணைக்களம் என்பன இணைந்து கூடுதலாக உப உணவுப் பயிர்ச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட வேண்டும் என ஆலோசனைகள் வழங்கி பயிர்ச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இரவு வேளைகளில் யானைகளும் பகல் வேளையில் குரங்குகளின் தொல்லையினையும் விவசாயிகள் எதிர்கொண்டு வருகின்றனர்.

குரங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என குரங்குகளினால் பயிர் அழிவுகளை எதிர்கொண்டுள்ள விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-8-350)



## ஹெரோயினுடன் ஐவர் கைது

(நெளுக்குளம்)

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற சோதனை நடவடிக்கையின் போது ஐவர் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் ஈரட்டை - வூபே பகுதியில் அமைந்துள்ள இராணுவச் சோதனை சாவடியில் வைத்து புத்தளத்திலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற ஹயஸ் ரக வாகனத்தை சோதனை மேற்கொண்ட போது அவர்களிடமிருந்து சிறியளவிலான ஹெரோயின் போதைப்பொருளை மீட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் நெளுக்குளம், கற்பகபுரம், ஈச்சங்குளம், மூன்றுமுறிப்பு, தேக்கவத்தை போன்ற பகுதிகளை சேர்ந்தவர்கள் எனவும் அவர்களிடமிருந்து ஹெரோயின் போதைப் பொருளையும், அவர்கள் பயணித்த வாகனமும் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட ஐவரிடமும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (4-8-299)

# இராசிபலன்

22.05.2021
வைகாசி 08, சனிக்கிழமை
ஏகாதசி பின்னிரவு 2.54 மணிவரை
உத்தரம் முற்பகல் 10.05 மணிவரை
சுபநேரம் 2.52-4.22 மணிவரை
இராகுகாலம் 8.52-10.22 மணிவரை
சந்திராஷ்டமம்: பூரட்டாதி
ஏகாதசி விரதம்

வளவன்

**மேஷம்**: சூழ்நிலைக்கேற்ப குணத்தை மாற்றிக் கொள்வீர்கள், தேகநலன் சீராகும், காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**ரிஷபம்**: மன மகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்**: யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**கடகம்**: காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், கௌரவக் குறைவான சில சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்**: புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**கன்னி**: விரும்பிய உணவுப் பொருட்களை சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், உடல் நலனில் அதிக ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு.

**துலாம்**: நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்**: குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், விரும்பிய உணவுப் பொருட்களை சாப்பிட்டு மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு**: குடும்ப ஒற்றுமை கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், கௌரவமான நாள்.

**மகரம்**: குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**கும்பம்**: நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு பின்னணியுடன் செயற்படுவர், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், குடும்ப பொறுப்புகள் கூடும்.

**மீனம்**: உறவினர் வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

உனக்குள் வாழும் பாவங்கள் படமெடுக்கும் பாம்புகள் போன்றவை

# சுகாதாரக் கொள்கைகளை விமர்சித்தால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுவர்

## சுகாதார அமைச்சின் செயலர் எச்சரிக்கை



(கொழும்பு)
அரசாங்கத்தின் சுகாதார கொள்கைகளை விமர்சித்து, ஊடகங்களில் பல்வேறு கருத்துக்களை வெளியிடுவது தாபன சட்டக் கோவையின் பிரகாரம் குற்றம் எனவும், அவ்வாறான கருத்துக்களை வெளியிடுவோருக்கு எதிராக இனிமேல் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சின் செயலர் மேஜர் ஜெனரல் சஞ்ஜீவ முனசிங்க அறிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் சுகாதார கொள்கைகளை விமர்சிப்பதன் ஊடாக சுகாதார அமைச்சு மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்கள் தொடர்பில் மக்களின் நம்பிக்கை இழக்கும் நிலை ஏற்படுவதாகவும் அதனை கருத்தில் கொண்டு இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேஜர் ஜெனரால் சஞ்ஜீவ முனசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, இனிமேல் அரசாங்கத்தின் சுகாதாரக் கொள்கைகளை விமர்சித்து கருத்து வெளியிடும் சுகாதாரத் துறை அதிகாரிகள், உத்தியோகத்தர்களுக்கு எதிராக தாபன விதிக் கோவையின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் எச்சரித்துள்ளார். (நி-4)

# புத்தாண்டுக் கொத்தணியில் 56,000 இற்கும் அதிக தொற்றாளர்கள்

(கொழும்பு)
புத்தாண்டு கொத்தணியில் கொவிட்-19 தொற்றுறுதியானவர்களின் எண்ணிக்கை 56,605 ஆக அதிகரித்துள்ளது.

35 நாட்கள் என்ற குறுகிய காலப்பகுதியில் இந்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதுவரை கொவிட்-19 தொற்றுறுதியானவர்களில் அதிகளவிலானோர் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர்.

அந்த மாவட்டத்தில் இதுவரை 42,247 பேர் பதிவாகியுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் 28,306 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 12,707 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நுவரெலியா, குருநாகல், கண்டி, இரத்தினபுரி, மாத்தளை, புத்தளம் காலி மற்றும் மாவட்டங்களில் தலா 2000 இற்கும் அதிகமானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (நி-4)

LK Newspapers Blamal.com

# இரண்டு வாரங்களாவது முடக்குங்கள் தொற்று அதிகரிப்பை தடுக்க இதுவே வழி

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி

(கொழும்பு)
நாட்டை முழுமையாக இரண்டு வாரங்களாவது முடக்கினால் மாத்திரமே கொரோனா தொற்று அதிகரிப்பினை தடுக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "மும்மடங்கு நோயாளர்கள் சமூகத்தில் இருக்க முடியும். இவர்களின் வாயிலாக மேலும் தொற்று பரவக்கூடலாம்.

நிச்சயமாக, தற்போதைய நிலைமைக்கு அமைய இரண்டு வாரங்களேனும் நாட்டு மக்களை வீட்டிற்குள் முடக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

அவ்வாறு ஒரு நடவடிக்கையினை மேற்கொண்டால் மாத்திரமே கொரோனாத் தொற்று ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவுவதனை தடுக்க முடியும். ஒரு வைத்தியர் என்ற



வகையில் நான் பரிந்துரைக்கின்றேன். முடக்க நிலை அவசியமாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# 14 நாட்களுக்கு நாடு முடக்கப்படாது என்கிறார் இராணுவத் தளபதி



(கொழும்பு)
நாட்டினை 14 நாட்களுக்கு முடக்கவுள்ளதாக வெளியான செய்தியினை இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா நிராகரித்துள்ளார்.

இதுபோன்ற எந்த முடிவும் இதுவரை எடுக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜூன் முதலாம் திகதி முதல் 14 நாட்களுக்கு நாடு முடக்கப்படவுள்ளதாக சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வரும் தகவல்கள் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


சமூக ஊடகங்களில் பரவும் தவறான கருத்துக்களை கண்டு மக்கள் ஏமாற்றமடையக் கூடாது எனவும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (நி-4)

# கொரோனாத் தொற்றாளர் ஒருவரால் 30 நாட்களில் 406 பேருக்குத் தொற்று பரவும்

## கலிபோர்னியா தொற்றுநோய் ஆராய்ச்சியாளர்கள் அறிக்கை

**(கொழும்பு)**

**கொவிட் -19 தொற்றுக்குள்ளான நபரொருவர் சமூக இடைவெளி, தனிமைப்படுத்தலை முறையாக கடைப்பிடிக்காமல் இருந்தால் 30 நாட்களில் 406 பேருக்கு அவரிடமிருந்து கொரோனாத் தொற்று பரவும் என கலிபோர்னியாவில் உள்ள தொற்றுநோய் ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படாத ஒருவர் முகக்கவசம் அணிந்து, முகக்கவசம் அணியாத கொரோனாத் தொற்றுடைய ஒருவருடன் பேசினால் தொற்றால் பாதிக்கப்படாத அந்த நபருக்கு 30 சதவீதம் கொரோனாப் பரவ வாய்ப்பு உள்ளது.

அதேசமயம் தொற்றுக்குள்ளான நபரும் தொற்றால் பாதிக்கப்படாத நபரும் முகக்கவசம் அணிந்திருந்து பேசினால், 1.5 சதவீதம் மட்டுமே தொற்றால் பாதிக்கப்படாத நபருக்கு பரவ கூடும்.

எனவே கொரோனாத் தொற்றுள்ள நபர் சமூக இடைவெளி வழிமுறைகளை பின்பற்றாவிட்டால் அவரால் 30 நாட்களில் சுமார் 406 பேர் வரை பாதிக்கப்படலாம்.

தொற்றால் பாதிக்கப்பட்ட நபரொருவர் 50 சதவீதம் சமூக இடைவெளியைப் பின்பற்றினால் அவரால் 406 நபர்களுக்குப் பதிலாக 15 பேர் மட்டுமே பாதிக்கப்படுவார்கள்.

தொற்றால் பாதிக்கப்பட்ட நபரொருவர் 75 சதவீதம் சமூக இடைவெளியைப் பின்பற்றினால் அவர் மூலம் வெறும் 2 பேர் மட்டுமே கொரோனாவால் பாதிக்கப்படுவார்கள்.

ஆகவே கொரோனா விதிமுறைகளை முறையாக பின்பற்றினால் இலட்சக்கணக்கானவர்களுக்கு நோய் பரவாமல் தடுக்க முடியும் என அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-4)



அமரர் நடராசா பாலசிங்கம் 31 ஆவது நாள் நினைவு நாளில் இளைஞர் சம்மேளனத்தால் கொவிட் தொற்றால் பாதிப்புக்கு ஆளாவோரின் நலன் கருதி கட்டில் தயாரிக்கும் பணிக்காக 50 ஆயிரம் ரூபாய் தமிழ் விருட்சமூடாக அவரது குடும்ப உறவுகளால் நேற்று வழங்கி வைக்கப்பட்டது. (படம்: சதீஸ்)

# குறுகிய பயணக்கட்டுப்பாடுகளால் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியாது

## மருத்துவர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

மாகாணங்களுக்கிடையிலான பயணத்தடை, தேசிய அடையாள அட்டை முறைமை, மூன்று நாட்கள் குறுகிய பயணக்கட்டுப்பாடு போன்றவற்றால் கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்த முடியாது என இலங்கை மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே இலங்கை மருத்துவர் சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், 'கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் சுகாதார கட்டமைப்பு பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளது.

அரசாங்க வைத்தியசாலைகளில் தொற்றாளர்கள் நிரம்பியுள்ளனர். இதனால் ஏனைய நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதிலும் நெருக்கடி நிலை உருவாகியுள்ளது.

சமூகத்தில் மேலும் பல தொற்றாளர்கள் இருக்கலாம். எனவே, தற்போது நடைமுறையில் உள்ள மாகாணங்களுக்கிடையிலான பயணத்தடை, தேசிய அடையாள அட்டை முறைமை, மூன்று நாட்கள் குறுகிய பயணக்கட்டுப்பாடு போன்றவற்றால் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது.

எனவேதான் 14 நாட்களுக்கு கடும் பயணக்கட்டுப்பாடுகளை அல்லது ஊரடங்கு சட்டத்தை பிறப்பிக்குமாறு கேட்கின்றோம்.

அதன் பின்னர் நிலைமையை மீளாய்வு செய்து கட்டம், கட்டமாக ஊரடங்கை தளர்த்தலாம்" எனத் தெரிவித்துள்ளார். (நி-4)

## கொரோனாவைக் காரணம் காட்டி

# நினைவேந்தலைத் தடுத்தவர்கள் ஆடைத்தொழிற்சாலை விடயத்தில் மௌனம்

(பனிக்கன்குளம்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை தடுக்க நீதிமன்றம் வரை சென்றவர்கள் ஆடைத் தொழிற்சாலைகளில் கொரோனாக் கொத்தணிகள் உருவாக்கி வருகின்றபோதும் ஆடைத் தொழிற்சாலைகளை மூட ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க.விஜிந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் நேற்று அவரது அலுவலகத்தில்ஊடக சந்திப்பு ஒன்றினை நடத்தியுள்ளார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தனிமைப்படுத்தலோ அல்லது முடக்கமோ ஏற்படுகின்றபோது மக்களுக்கான குடிதண்ணீர் போன்ற சேவைகளை தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றால் கிராம உத்தியோகத்தரிடம் அல்லது வட்டார மக்கள் பிரதிநிதிகளிடம் அல்லது உப அலுவலக பொறுப்பதிகாரிகளுக்கு தெரிவிக்கும் பட்சத்தில் பிரதேச சபையினால் மேற்கொள்ளக்கூடிய சகல வசதிகளையும் இலவசமாக மேற்கொள்ள அனைத்து பொறுப்பதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளேன். எனவே தேவையுடைய மக்கள் அவர்களை தொடர்புகொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (8-4-281)

# அனைவரது ஒத்துழைப்புடனும் கொரோனாவைக் கட்டுப்படுத்துவோம்

## வவுனியா அரச அதிபர்

(குருமன்காடு)

கொரோனாத் தாக்கத்தின் மூன்றாவது அலையில் வவுனியா மாவட்டத்தில் 654 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன், 3 பேர் மரணித்துள்ளதாக மாவட்ட அரச அதிபர் எஸ்.எம்.சமன்பந்துலசேன தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தின் தற்போதைய கொரோனாத் தாக்கத்தின் நிலைமைகள் தொடர்பாக மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்டத்தில் கொரோனாத் தாக்கத்தின் தற்போதைய நிலை தொடர்பாகவும் அதனை கட்டுப்படுத்த முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

அத்துடன் எதிர்வரும் நாட்களில் நடைமுறையில் வரும் பயணத்தடையின் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. தற்போது நோய் பரவும் வேகம் கூடுதலாக உள்ளது.

மூன்றாவது அலையின் காரணமாக வவுனியாவில் 654 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன், 3 பேர் மரணித்துள்ளனர்.

எனவே அனைவரும் ஒத்துழைத்து கொரோனாத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். இதற்கு அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பும் அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார். (8-4-250)

# புகையிரதங்களும் சேவையில் ஈடுபடாது

(கொழும்பு)
நாடளாவிய ரீதியில் இன்று சனிக்கிழமை முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி நள்ளிரவு வரையில் எந்தவொரு பயணிகள் புகையிரதங்களும் சேவையில் ஈடுபடாது என தெரிவிக்கப்படுகின்றது.

நாடளாவிய ரீதியில் நேற்று இரவு 11 மணி முதல் எதிர்வரும் 25 ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை முழுநேர பயணத்தடை அமுலாக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மீண்டும் 25ஆம் திகதி இரவு 11 மணி முதல் 28 ஆம் திகதி அதிகாலை 4 மணி வரையில் மீண்டும் பயணத்தடை அமுல்படுத்தப்படவுள்ளதாக இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் அமுல்படுத்தப்பட்டதை போன்று இந்த நடமாட்ட கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையிலேயே புகையிரத திணைக்களம் இந்த தீர்மானத்தினை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)

# தரித்து நின்ற கப்பலில் தீப் பரவல்

(கொழும்பு)
கொழும்புத் துறைமுகத்திற்கு அருகில், நங்கூரமிடப்பட்டிருந்த கப்பலொன்றில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடற்படையின் ஊடகப்பேச்சாளர் இந்த விடயத்தினை உறுதிப்படுத்தியுள்ளார்.

எம்.வி. எக்ஸ்-பிரஸ் பேர்ல் என்ற கப்பலிலேயே இவ்வாறு தீப் பரவல் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.



கப்பலில் ஏற்பட்டுள்ள தீயினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் முயற்சியில் இலங்கை கடற்படையினர் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)

# நாகொடை வைத்தியசாலையில் இருந்து தப்பியோடிய ஆறு தொற்றாளர்கள்

(களுத்துறை)
களுத்துறை நாகொடை வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்று வந்த கொரோனாத் தொற்றாளர்களான மூன்று பெண்கள் உட்பட ஆறு பேர் நேற்று முன்தினம் இரவு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக வைத்தியசாலை தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொரோனாத் தொற்றாளர்கள் தங்க வைக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படும் வைத்தியசாலையின் 3ஆவது விடுதியில் சிகிச்சை பெற்று வந்த மூன்று பெண்களும், மூன்று ஆண்களுமே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர்.

இவர்கள் வைத்தியசாலையின் மதில் சுவருக்கு மேல் அமைக்கப்பட்டிருந்த வலையை பிரித்து தப்பிச் சென்றுள்ளனர். தப்பிச் சென்றுள்ள பெண்ணொருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். (நி-4)

# வட்டி வீதங்களை தளம்பலின்றி பேணுவதற்கு தீர்மானம்

(கொழும்பு)
நாட்டில் காணப்படும் வட்டி வீதங்களை தளம்பலின்றி பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் நாணய சபையினால் இது குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் நாணய சபையின் சந்திப்பு நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்றது.

இதன்போதே இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுகின்றது.

இதற்கமைய நிலையான வைப்பு வசதி வீதத்தை 4.50 வீதமாகவும், நிலையான கடன் வசதி விகிதம் 5.50 வீதமாகவும் பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## செய்தி வாசனை!

ஒரு மனிதன் கோபமாக இருக்கின்றானா?மகிழ்ச்சியாக இருக்கின்றானா? என்கின்றதை அவன் முகத்தைப் பார்த்தே கண்டு பிடித்துவிடலாம் அதாவது.

முகபாவங்கள் மூலமாக மனிதன் தன்னுடைய மனநிலையை வெளிப்படுத்துகின்றான்.

ஆனால் விலங்குகள் அப்படி இல்லை. மற்ற பாலூட்டிகள் எல்லாம் தம்முடைய சிற்றினத்தில் உள்ள உறுப்பினர்களின் மனநிலையையும் சமூக அந்தஸ்தையும் வாசனை மூலமாக கண்டு பிடிக்குதாம்.

ஒரு தாய்க்கும் குட்டிக்கும் இடையில் ஏற்படுகின்ற பிணைப்பிலே தான், வாசனையைத் தேர்ந்தெடுக்கின்ற பழக்கம் உண்டாகின்றதாம்.

ஒரு குட்டி பிறந்தவுடனே தன்னுடைய உடம்புடன் பரவியிருக்கின்ற பிரசவகாலத் திரவங்களின் வாசனையும், தாயின் உடல் வாசனையும் ஒன்றாக இருக்கிறதனாலே தான் தாயை நாடி சரியாக ஓடுகின்றது. அதற்குப் பின்பு பால் குடிக்கும் போதும், தாய்– குட்டியை நக்கி தன் எச்சிலைக் குட்டியின் உடம்பிலே பூசிவிடுகின்ற போதும் இந்த வாசனை ஒற்றுமை நீடிக்கின்றது.

மனிதனைத் தவிர மற்ற பாலூட்டி விலங்குகள் எல்லாம் பெர்மோன்கள் எனப்படுகின்ற ஆவியாகின்ற வேதிச் சேர்மங்களின் உதவியால் தான் செய்திகளைப் பரப்புகின்றன என்பது அறிவியல் உண்மை. இந்த வேதிச் சேர்மங்களை அடையாளம் கண்டு கொள்ள அந்த விலங்குகளிடம் பல புலன்கள் உண்டு. உணர்வு தூண்டும் மூலக்கூறுகள் காற்றில் பரவி விலங்குகளின் மூக்கில் நுழைந்து வாசனை உணர்வை உண்டாக்குகின்றது.

அங்கேயிருந்து மோப்பக்குமிழ்களில் உள்ள விசேடமான ஏற்பிகளுக்குச் செய்தி போகின்றது.அங்கே அது பொருள் காணப்பட்டு விலங்கின் நடவடிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.

மோப்பக்குமிழ்களை நீக்கிவிட்டால் தாய்ப்பாசமும் பிள்ளைப்பாசமும் மறைந்து போய்விடுகின்றதாம்.

குட்டிகளை தாய் புறக்கணித்துவிடுகின்றதாம்.சில சமயங்களில் மோப்ப உணர்வை இழந்த தாய், தன்னுடைய குட்டிகளையே சாப்பிடுகின்றதாம்.

1962 இலே லண்டனில் எம். ப்ரூஸ் என்கின்றவர் தலைமையில் ஒரு குழு ஆராய்ச்சி செய்ததாம். அவர்கள் ஒரு வேடிக்கையான விளைவைக் கண்டுபிடித்தார்களாம். அதற்கு ப்ரூஸ் விளைவு என்றே பேர் வைத்துவிட்டார்களாம்.

அது என்ன விபரம் என்றால் கருவுற்ற ஒரு பெண் சுண்டெலி, வேறு ஒரு ரகத்தைச் சேர்ந்த ஆண் சுண்டெலியின் வாசனையை முகர நேர்ந்தால் அதன் கர்ப்பம் தடைப்பட்டுப் போகின்றதாம். கலைந்து போய்விடுதாம். அது தான் ப்ரூஸ் விளைவு.

நாய்கள் தரையைத் தேய்த்துப் பின்னங்கால்களால் மண்ணை உதைத்து வீசும்.அப்பொழுது அதன் உள்ளங்காலில் இருக்கின்ற சுரப்பிகளில் இருந்து ஒரு சுரப்பு தலையில் பரவும். அது என்ன தெரியுமா?

நாய் தன்னுடைய அனுபோகப் பரப்பைக் குறித்து வைக்கின்ற ஒரு உத்தி அது. நாய், பூனை இதெல்லாம் ஓடி வந்து உங்கள் கால்களில் உடம்பை தேய்த்தால்.. ஆகா.. எவ்வளவு எஜமான் விசுவாசம் இவைகளுக்கு அப்படி என்று எண்ணி ஏமாந்து போய்விடாதீர்கள். உண்மையில் உங்களை அதுகளோடு வளர்ப்புப் பிராணியா மற்ற நாய், பூனைகளுக்கு அடையாளம் காட்டி வைக்கிறதற்காகத் தான் உங்கள் மேல் வாசனையைப் பூசி வைக்கின்றது.

யானைகள் மரக்கிளைகளை ஒடித்து வைக்கும். தந்தங்களாலே மரத்தைக் கீறி வைக்கும்.புலி நகங்களாலே மரப்பட்டைகளைக் கீறிவைக்கும். இது எல்லாம் அடையாளச் சின்னங்கள். அதைப் பார்த்து மற்றது புரிந்து கொள்ளும்.

ஆக மிருகங்களுக்கு மொழிப் பிரச்சினை இல்லை. வாசனை மூலமாகவே செய்திகளை பரிமாறிக் கொள்கின்றது. வாசனை மூலமாகவே செய்திகளைத் தெரிந்திருக்கின்ற மனிதர்களும் உண்டு.

தன் வீட்டிலே உட்கார்ந்து கொண்டு எதிர்த்த வீட்டிலே என்ன சமையல் என்கின்றதை மிகவும் சரியாக கண்டுபிடிக்கின்ற புத்திசாலிகள் உண்டு.

ஒருத்தர் சொன்னார். எதிர்த்த வீட்டுக்காரரிடம் இன்றைக்கு உங்கள் வீட்டிலே கத்திரிக்காய் சாம்பார் சரியா? என்றார். எப்படிக் கண்டு பிடித்தீர்கள்? என்றார் அவர் ஆச்சரியமாக. அது ஒன்றும் பெரிய விடயம்இல்லை. எங்கள் தோட்டத்தில் காய்த்திருந்த கத்திரிக்காயைக் காணவில்லை. அது தான் என்றார் இவர்.

# அமெரிக்காவுடன் இணையும் ஸ்ரீலங்கா விமான சேவை



(கொழும்பு)

ஸ்ரீலங்கன் விமான சேவை அமெரிக்காவின் போயிங் விமான சேவை நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றவுள்ளது.

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் அண்மையில் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. விமானங்களை பராமரித்தல் விமான உபகரணங்கள் மற்றும் விமான உதிரிப்பாகங்களை பராமரித்தல் இரு தரப்பு முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தக இலக்குகளை அடைந்து கொள்வது போன்ற நோக்கங்களுடன் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தென் மாகாணத்திலுள்ள இயற்கை முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்கள் சுற்றுலா மையங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. சுற்றுலாத் துறை அமைச்சு இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது. (நி-4)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்


## விரதங்கள்



## செல்வ வளம் தரும் வெள்ளிக்கிழமை விரதம்

(தொடர்ச்சி)

### கிரக தோஷ பரிகாரம்



சனி பிரதோஷ வழிபாடு செய்து வருவது சனிக்கிரகத்தால் ஏற்பட்ட பீடையைப் போக்கும்.

சுத்தமான ஆற்று மண்ணை எடுத்து செவ்வாய் கிரகத்தை அதில் ஆவாகித்து மஞ்சள் மலர்களால் பூஜித்து விரதம் இருக்க வேண்டும். அவ்வாறு செய்வது செவ்வாய் கிரக பீடையை நீக்கும்.

புதன் கிரக தொல்லையில் இருந்து விடுபட அதிகாலையில் விஷ்ணுவை அபிஷேக, ஆராதனை செய்து பூஜிக்க வேண்டும்.

குரு பார்க்க கோடி நன்மை தரும். குரு கிரக பீடையைப் போக்க அதிகாலையில் 4.30 மணி முதல் 6 மணிக்குள் தட்சிணாமூர்த்தி அல்லது கிருஷ்ண பரமாத்மாவை வெள்ளை மலர்களாலும் துளசியாலும் பூஜித்து ஒரு மண்டலம் விரதம் இருக்க வேண்டும்.

சுக்கிர கிரக பீடை விலக வெள்ளிக் கிழமை இரவில் தீபத்தை ஏற்றி அதில் அம்பிகையை பூஜித்து விரதம் இருக்க வேண்டும்.

ராகு, கேதுகள் தோஷம் விலக திருநாகேஸ்வரம், கீழப்பெரும்பள்ளம், காளஹஸ்தி போன்ற ஆலயங்களுக்குச் சென்று பூஜை செய்து விரதம் இருப்பது நன்மை தரும்.

**சுக்கிரனுக்கு உரியவை**

- தானியம் - மொச்சை
- மலர் - வெண்தாமரை
- வஸ்திரம் - வெள்ளை நிற ஆடை
- ரத்தினம் - வைரம்
- நிவேதனம் - வெண் அன்னம்
- சமித்து - அத்தி
- உலோகம் - வெள்ளி
- சுவை - புளிப்பு

**மகாலட்சுமி ஹோமம்**

எடுத்த காரியம் தடங்கல் இன்றி நிறைவேற வெற்றி அடைய கணபதி ஹோமம் செய்கிறார்கள். அதைப் போல் வாழ்க்கையில் வளம் நிறைய கடன் சுமை விட்டொழிந்து செல்வம் சேர மகாலட்சுமி ஹோமம் செய்ய வேண்டும்.

லட்சுமி தேவியின் கடைக்கண் பார்வை நம் மீது பட்டாலே போதும் நீங்காத செல்வம் நிறைந்து வழியும். கார்மேனி செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான் நாராயணனின் அருளும் கிடைத்து விடும்.

மகிழ்ச்சியான மணவாழ்க்கை, ஆன்மிக வளர்ச்சி மற்றும் பொருள்வளம், சீரான வாழ்க்கை, வாழ மகாலட்சுமி ஹோமம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டியது அவசியம். கணவன் - மனைவி இடையே பிரச்சினைகள் சரியாகி சுபீட்சம் ஏற்படும்.

வெள்ளிக்கிழமை மகாலட்சுமி ஹோமம் செய்ய மிகவும் நல்லநாள். மேலும் பௌர்ணமி அன்றும் மகாலட்சுமி ஹோமம் செய்யலாம். மகாலட்சுமி ஹோமம் செய்து மகத்தான வாழ்க்கை பெறுவோம்.

ஸ்ரீலட்சுமி காயத்ரி
ஓம் மஹாலட்சுமி ச வித்மஹே
விஷ்ணு பத்னீ ச தீமஹி
தந்நோ லட்சுமி; ப்ரசோதயாத்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## சுகாதார விதிமுறைகளை மீறல் மேலும் 414 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறும் வகையில் செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேலும் 414 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

முகக்கவசம் அணியாமை மற்றும் மாகாண எல்லைகளைக் கடந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-4)

## நான்கு நாட்களில் 46 உடல்கள் ஓட்டமாவடியில் நல்லடக்கம்

(கொழும்பு)

கடந்த திங்கள் முதல் நேற்று முன்தினம் வியாழன் வரையான நான்கு நாட்களில் கொரோனாத் தொற்றினால் மரணித்த 46 உடல்கள் ஓட்டமாவடி-மஜ்மா நகர்ப்பகுதியில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. மேலும் குறித்த இடத்தில் நேற்று முன்தினம் மட்டும் 8 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாக கோளறைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார். (நி-4)

## கொத்மலை ஆடைத்தொழிற்சாலை மேலும் 26 பேருக்குத் தொற்று

(ஹற்றன்)

நுவரெலியா-கொத்மலை, நியகங்தொர பகுதியிலுள்ள தனியார் ஆடைத் தொழிற்சாலையொன்றில் பணிபுரியும் மேலும் 26 ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை குறித்த தொழிற்சாலையிலுள்ள 90 ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளன. குறித்த முடிவுகளின் அடிப்படையிலேயே 26 ஊழியர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 160 | 120 | 180 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 120 | 120 |
| தக்காளி | 250 | 280 | 200 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 | 50 |
| கோவா | 160 | 140 | 140 | 200 |
| கரட் | 150 | 220 | 200 | 240 |
| பூசணி | 30 | 50 | 40 | 40 |
| புடோல் | 100 | 160 | 80 | 160 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 260 | 200 | 350 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 140 |
| பாகற்காய் | 200 | 250 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 160 | 160 | 80 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 130 | 140 | 200 |
| பயற்றங்காய் | 240 | 260 | 100 | 120 |
| லீக்ஸ் | 150 | 140 | 140 | 160 |
| பீற்றூட் | 120 | 80 | 100 | 150 |
| கறிமிளகாய் | 200 | 160 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 450 | 900 | 400 | 600 |
| போஞ்சி | 200 | 350 | 200 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 120 | 160 |
| கீரை - 1 பிடி | 70 | 70 | 40 | 40 |
| தேசிக்காய் | 180 | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 200 | 250 | 250 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | 120 | 120 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | -- | 50 | -- |

### எதிர்வரும் 3 மாதங்களுக்கு

# எந்தவொரு பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்படாது

### அமைச்சர் பந்துல குணவர்தன



(கொழும்பு)

எதிர்வரும் 3 மாதங்களுக்கு எந்தவொரு பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்படாது என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய கோவிட் பரவல் நிலைமையில், சரக்கு போக்குவரத்து இடம்பெறாமையினால் ஏற்பட்டுள்ள கொள்கலன் பற்றாக்குறையின் காரணமாக, சரக்கு போக்குவரத்துக்கான செலவும் சர்வதேச ரீதியில் பாரியளவில் உயர்வடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

உலக சந்தையில் எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய்யின் விலை அதிகரித்துள்ளதாகவும் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார். (ம-03)

# பொலிகண்டியில் மரணச் சடங்கில் கலந்து கொண்டவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிகண்டி பகுதியில் மரணச் சடங்கில் கலந்து கொண்ட ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கடந்த 7 ஆம் திகதி பொலிகண்டி பகுதியில் மரணச் சடங்கு நடைபெற்ற நிலையில் அதில் கலந்து கொண்டவருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியான நிலையில் ஆலடி, பொலிகண்டி கிழக்கைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் சுகாதார பிரிவினர் அவருடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-03)

# பனை மரத்துடன் மோதி இராணுவ வாகனம் விபத்து

### அச்சுவேலிப் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்சுவேலிப் பகுதியில் நேற்று அதிகாலை இராணுவத்தின் கப் ரக வாகனம் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் 3 பேர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, பலாலியில் இருந்து யாழ்.நோக்கி பயணித்த இராணுவத்தின் சிறிய கப் ரக வாகனம் வீதியை விட்டு விலகி அருகில் இருந்த பனை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

சம்பவத்தில் வாகனத்தின் முற்பகுதி பலத்த சேதமடைந்துள்ளதுடன், மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம்தொடர்பில்இராணுவம் மற்றும் அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-03)

## பொது மக்கள் ஒத்துழைத்தாலே கொரோனாவை கட்டுப்படுத்தலாம்

### யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி

கொரோனா தொற்றினை கட்டுப்படுத்தும் நோக்குடன் அரசாங்கம் பயணக் கட்டுப்பாட்டை விதித்தாலும் மக்கள் வழங்கும் பூரண ஒத்துழைப்பின் மூலமே கொரோனா தொற்றினை முழுமையாக கட்டுப்படுத்த முடியும் என யாழ்ப்பாண மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

கொரோனாப் பரவலை கட்டுப்படுத்தும் முகமாக யாழ். மாவட்ட மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் வகையில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-03.33)

### 240 சாராயப் போத்தல்களுடன்

# மருதனார்மடத்தில் ஒருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

வாகனம் ஒன்றில் சட்டத்திற்கு மாறாக எடுத்துச் செல்லப்பட்ட சுமார் 240 சாராய போத்தல்கள் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையின்கீழ் இயங்கும் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி மருதனார்மடத்தில் வைத்து சாராயம் கொண்டு சென்ற வாகனத்தை முற்றுகையிட்ட பொலிஸார், வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட 240 சாராய போத்தல்களை கைப்பற்றியுள்ளதுடன் ஒருவரை கைதுசெய்து வாகனத்தை கைப்பற்றி சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ம-03)

### பயணத்தடை அமுலாகியுள்ள நிலையில்

# பொருள் கொள்வனவிற்காக யாழில் திரண்ட மக்கள்

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் நேற்று இரவு 11 மணிக்கு மீண்டும் முழுமையான பயணத்தடை அமுல்படுத்தப்பட்ட நிலையில் நேற்று யாழ். நகரில் அதிகமான மக்கள் பொருட் கொள்வனவிற்காக திரண்டதை அவதானிக்க முடிந்துள்ளது.

இதன்படி நேற்று இரவு 11 மணி முதல் எதிர்வரும் 25 ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை அமுலாகும்வகையில் இந்த பயணத்தடை அமுல்படுத்தப்படவுள்ளது.

மேலும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 11 மணி முதல் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை நான்கு மணிவரை மீண்டும் பயணத்தடை அமுல்படுத்தப்படவுள்ளது. இதன்போது அத்தியாவசிய சேவைகளை மாத்திரமே முன்னெடுக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முழுநேர பயணத்தடை விதிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் அடையாள அட்டை இலக்கத்திற்கு அமைய வெளியில் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

எனினும் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோர் அனுமதி அட்டை மற்றும் நிறுவன அழைப்பு கடிதம், நிறுவன அட்டை என்பவற்றை பயன்படுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தனிமைப்படுத்தல் மற்றும் பயணத்தடை விதிமுறைகளை மீறி செயற்படும் நபர்கள் கைது செய்யப்படுவார்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-03.33)


# மரண அறிவித்தல்

## நீக்கிலஸ் தேவதாஸ்



**பிறப்பு : 08.06.1939**
**இறப்பு : 21.05.2021**

*அல்லைப்பிட்டி, 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சில்லாலை மற்றும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட நீக்கிலஸ் தேவதாஸ் நேற்று (21.05.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.*

அன்னார் காலஞ்சென்றவர்களான நீக்கிலஸ் - மரியம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை - றோசமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மேரி மாகிறேற்றின் அன்புக் கணவரும் அனற்மேசி, அரஸ்டானியல் (இ.போ.சபை, கோண்டாவில்), அனிற்றா (கச்சேரி - யாழ்ப்பாணம்) ஆகியோரின் தந்தையும் எமில் சுதாகரன், அன்ரனெற் ஜனிற்றா, றமீந்தன் ஆகியோரின் மாமனாரும் அக்னெஸ், றோசறிமலர், சிங்கராயர் (ஜேர்மனி), சகாயநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மரியநாயகம், மேரிபற்றிமா (கனடா), காலஞ்சென்ற தேவநாயகம் மற்றும் மரியநாயகம், சூசைப்பிள்ளை, மேரி இமல்டா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் அனோஜன், அபினாஸ், அஸ்மிதன், வக்ஷன், றுவான் கிருத்திக், அக்ஷயா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 26, இராசாவின்தோட்ட லேன், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நாளை (23.05.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக அல்லைப்பிட்டி உத்தரியமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்


JK Newspapers BTamil.com

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.05.2021 இல் வெளியிடப்பட்டது.